2003 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, திரு. எச். ராஜா, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

114—

மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம்

***19005—திரு. எச். ராஜா:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002 ஜனவரிக்குள் தமிழகத்தில் மாநில மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் (State Electricity Regulatory Commission) முழுமையாகச் செயல்படக்கூடியதாக அமையும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு உறுதி அளித்ததா?

(ஆ) ஆம் எனில், மாநில மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முழுமையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது Current subject Current ஆக எடுத்திருந்தால் better-ஆக இருந்திருக்கும். ஏனென்றால், இது 13 மாதங்களுக்கு முன்பாகக் கேட்டிருந்த கேள்வி. ஆகவே, இம்மாதிரியான விஷயங்கள் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனப் பேரவைத் தலைவர் அவர்கள் அந்த செக்ஷனுக்கு அறிவுறுத்துவது பலன் உள்ளதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கிறேன். அமைச்சருடைய பதிலுக்கு நன்றி.

[2003 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 115, திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

115—

கூட்டுறவு அங்காடி

***6252—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு, ஈச்சன்விடுதி பகுதி மக்களுக்குப் பகுதிநேர கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஈச்சன்விடுதி பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க வாய்ப்புகள் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈச்சன்விடுதி, செருவாவிடுதி வடக்கு ஊராட்சிப் பகுதியைச் சேர்ந்ததாகும். அந்தக் கிராமத்திலே ஏறக்குறைய 300 விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் ரேஷன் மற்றும் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக, ஏறக்குறைய 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செருவாவிடுதி வடக்குப் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் ஏழை, எளிய மக்களுடைய வேலைவாய்ப்பு போகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கிராமத்திலே விரைவில் பகுதிநேர அங்காடியைத் துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.